II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 522 of 2022**

Deposition of witness for the Plaintiff/PW 2
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 20.01.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Subash | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–

எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. கடனுறுதி சீட்டில் நான் சாட்சி கையொப்பம் போட்டிருக்கிறேன். வாதி சொசைட்டியில் லோன் எடுத்து தான் பிரதிவாதிக்கு கடன் கொடுத்ததாக நான் சொல்லியுள்ளதற்கு ஆவணம் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2015 ம் ஆண்டு ரூபாய் மூன்று லட்சமும் 2017 ம் ஆண்டு இரண்டு லட்சமும், 2018 ம் ஆண்டு இரண்டு லட்சமும் வாதி கடன் கொடுத்தார். கடன் கொடுத்த தேதி எனக்கு ஞாபகம் இல்லை. எனக்கு தமிழ் எழுதவோ படிக்கவோ தெரியாது. ஆனால் எனக்கு வா.சா.ஆ.1–ன் சங்கதிகளை படித்து காண்பித்தார்கள். வா.சா.ஆ.1 வட்டிக்கான பத்திரம் என்றால் சரியல்ல. கடன் பத்திரம் தான். வா.சா.ஆ.1 ல் நான் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பொய்யான ஆவணம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.